**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No.128/2023 |
| Deposition of witness | | PW1/LW1 |
| Name | | திரு.சிவக்குமரன் |
| Father’s/Husband Name | | கன்னுச்சாமி |
| Village | | பழவேறிக்காடு, மதுக்கூர் |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 50/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 10th day of May 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**எதிரி ஆஜர் எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பழவேறிக்காடு தெற்கு தெருவில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்கிறேன். எனது மனைவி சுதா பழவேறிக்காடு ஊராட்சி மன்ற தலைவராக உள்ளார். ஆஜர் எதிரியை தெரியும். எங்கள் ஊரைச்சேர்ந்தவர். 14.02.2023 அன்று மதியம் 1.15 மணியளவில் மேலத் தெரு ரோட்டிற்கு எனது மனைவி வேண்டுகோளுக்கு இணங்க ரோட்டை பார்வையிடுவதற்காக நானும் எனது உறவினர் கிருஷ்ணமூர்த்தியும் சென்றிருந்தபோது ஆஜர் எதிரி என்னை பார்த்து ரோட்டிற்கு வரகூடாது என்று தேவடியா குச்சிக்காரி மகனே என்று

திட்டினார். ஏன் பொது ரோட்டில் வரக்கூடாது என்று நான் கேட்டதற்கு என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று அருவாளை தூக்கிக்கொண்டு ஆஜர் எதிரி வந்தார். உடனே அவரின் மனைவி தடுத்து அருவாளை வாங்கிக்கொண்டார். இந்த சம்பவம் கிருஷ்ணமூர்த்தி, ராமன் மற்றும் அருகில் இருந்த நபர்களுக்கு தெரியும். இது சம்மந்தமாக எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டதால் மதுக்கூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்ததுதான். அந்த புகார் மனு **அ.சாஆ-1** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்து குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

Web Copy